# ஸ்ரீ நாராயணதீர்த்தரின் கிருஷ்ண பக்தி

திருப்பூந்துருத்தி வி. வெங்கடேசன்

ஆந்திரத்திலே பிறந்து, அருந்தவம் புரிந்து ஆயர்குலக் கோமான் கண்ணனின் அற்புத லீலைகளில் பரத்துவம் கண்டு மகிழ்ந்து, பக்தி வெள்ளம் பரக்கப்பாயும் தமிழ் நாட்டில் வந்து வரகூரில் ஸ்ரீ வெங்கடேசப் பெருமானின் அருளால் கவரப்பட்டு வெகு நாள் தங்கி 'ஸ்ரீ கிருஷ்ண லீலா தரங்கிணி, சாண்டில்ய பக்தி, ஸுத்ர வ்யாக்யானம், ஹரிபக்தி, ஸுதார்ணவம், பாரிஜாத அபஹரணம்' முதலிய பக்தி நூல்களை இயற்றி அழியா மாமரம் சாட்சியாக திருப்பூந்துருத்தியில் 'ஜீவ சமாதி' அடைந்திருக்கும் மஹான் ஸ்ரீ நாராயணதீர்த்தரின் பாத கமலங்களில் நமஸ்கரித்து கர்ண பரம்பரையில் கேட்டவற்றையும் மற்றும் கிடைத்திருக்கும் சில சான்றுகளை வைத்தும் தெரிந்தவைகளை எழுதுகிறேன். நல்ல அம்சங்களை ஏற்று தவறுகளை மன்னிக்க வேண்டுகிறேன்.

நமது மும்மூர்த்திகளுக்கு முன்னோடியாக 16, 17–ம் நூற்றுண்டில் பிரகாசமாக விளங்கிய மஹான்கள் வரிசையில் ஸ்ரீ நாராயணதீர்த்தர் பஜனை சம்பிரதாயத்திற்கு முக்கிய அடிகோலியாக விளங்கியவர். ஸ்ரீ அன்னமாச்சார்யார், ஸ்ரீ புரந்தரதாஸர், ஸ்ரீ நாராயணதீர்த்தர் ஆகிய மூவரும் கர்நாடக சங்கீத சம்பிரதாயத்தின் முன்னோடியாக கருதப்படுகிறார்கள். ஸ்ரீ நாராயணதீர்த்தர் 1660–ம் ஆண்டு ஆஷாட சுக்ல ஏகாதசியில் ஸ்ரீ கங்காதர சாஸ்திரி மற்றும் பார்வதி அம்மாளுக்கு பிறந்தார் என்பது வரலாறு.

இவர் ஆந்திர தேசத்தில் குண்டூர் மாவட்டத்தில் 'காஜா' என்ற கிராமத்தில் தல்லவஜ்ஜல பிராமண வகுப்பில் பிறந்து கோவிந்த சாஸ்திரி என்ற பூர்வ ஆஸ்ரம பெயரில் வளர்ந்து, 12–வயதிற்குள்ளேயே வேதாத்ரியை சேர்ந்த அச்சம்மா என்ற சிறுமியை மணந்தார். 1745–ம் ஆண்டு மாசி மாதம் சுக்ல பக்ஷ அஷ்டமியில் தஞ்சையிலிருந்து 12 கி.மி. தூரத்தில் உள்ள திருப்பூந்துருத்தி என்ற அப்பர் பெருமானால் பாடல் பெற்ற க்ஷேத்திரத்தில் "ஜீவசமாதி" எய்தினார்.

நாராயணதீர்த்தர் கல்யாணத்திற்கு பிறகு ஒருநாள் தன் மனைவியின் சொந்த ஊர் குஞ்சுபள்ளி என்ற நரசிம்மஸ்வாமி க்ஷேத்ரத்தை நோக்கி கிருஷ்ணா நதியைக் கடந்து ஊரை அடைய முயற்சி செய்த பொழுது நதியில் திடீர் வெள்ளப் பிரவாகம் ஏற்பட்டு பாதியில் சிக்கினார். அப்பொழுது தன்னுடைய பிறவியில் செய்யப்பட வேண்டிய பாக்கி உள்ள நல்ல காரியங்களை நினைத்தும் தன் உயிருக்கு வந்திருக்கும் திடீர் ஆபத்தைக்கண்டு ஒரு நொடியில் ஆபத் சன்யாசத்தால் மட்டுமே தன்னை காத்துக் கொள்ளமுடியும் என்பதை உணர்ந்து "ஆபத்சன்யாசம்" பெற்றார். வெள்ளம் படிப்படியாக குறைய கரைக்கு சௌகர்ய மாக போய்ச் சேர்ந்தார். சம்சார கடலைத் தாண்டி மறுபிறவி எடுத்தது போல மன நிம்மதியடைந்தார். மனைவி வீட்டை அடைந்த பொழுது மனைவிக்கு சன்யாசியாக காட்சியளித்தார்.

## ஸ்ரீ நாராயணதீர்த்தருடன் தியாகராஜர்

ஸ்ரீ நாராயணதீர்த்தரை தியாகராஜர் பரமேஷ்டி குருவாக வகிக்கிறார். ஸ்ரீ நாராயணதீர்த்தரின் சிஷ்யர் சொண்டி

வெங்கட சுப்பையாவின் புதல்வர் சொண்டி வெங்கட்ரமண அய்யா, மஹான் தியாக ராஜரின் குரு. தியாகராஜர் தன்னுடைய வாழ்நாளில் இஷ்ட தெய்வமாக ஸ்ரீராம பிரானைப் பற்றி பாடி புகழ்பெற்றவர். பெரும்பகுதி கிரஹஸ்த ஆஸ்ரமத்தில் இருந்து பிறகு ஆபத்சன்யாசம் பெற்றவர். நாராயண தீர்த்தரோ சிறு பிராயத்திலேயே சங்கீதத்திலும், சமஸ்கிருதத்திலும் ஸ்ரீ கிருஷ்ணபகவான் பால் தன்னை அர்ப் பணித்துக் கொண்டவர். வேதாந்தத்தின் ஆறு அம்சங்களையும், அதன் நுணுக்கங் களையும் தன் முதல் குருவான வாசுதேவ பண்டிதர் மூலம் ஆழமாக அறிந்தவர்.

தன்னுடைய கிரஹஸ்த ஆஸ்ரமம் முடிந்ததை உணர்ந்து காஞ்சிபுரத்தை அடைந்து ஸ்ரீ சிவராமாநந்த தீர்த்தரை குருவாக ஏற்று அவர் ஆக்ஞைபடி ஸ்ரீ சங்கர பகவத் பாதாச்சார்யார் அருளிச்செய்த "பிரபோத சுதாகரம்" என்ற நூலை சுவடியிலிருந்து படிக்க ஆரம்பித்தார். காசியிலும் சுமார் 1701-ம் ஆண்டுவரை இவர் சிவராமாநந்த தீர்த்தருடன் இருந்ததாகவும் பல காவியங்களை கற்றறிந் ததாகவும் தெரிகிறது. அதன்பிறகு அவர் பிரயாக், பூரி, ஜெகந்நாத், ஆந்திராவில் சிம்மாத்ரி, சோபனாத்ரி, தலமஞ்சலி, அட்டங்கி முதலிய இடங்களுக்கு விஜயம் செய்து சிங்கராயக் கொண்டா சமீபம் உள்ள நரசிம்ம ஸ்வாமி மலையில் உள்ள குகையில் சுமார் பன்னிரெண்டு ஆண்டுகள் நிஷ்டை யில் இருந்ததாகவும், அட்டங்கி பகுதியில் சுமார் 50 அல்லது 60 குடும்பங்களுக்கு தரங்கம் சொல்லி கொடுத்ததாகவும் அந்த தரங்கம் பாடும் முறையை அவர்கள் இன்றும் கடைப்பிடித்து வருவதாக அறிகிறோம். அதன்பிறகு திருப்பதியை நோக்கி வந்து அடைந்து ஸ்ரீஏழுமலையானை தரிசித்தபின் தன்னுடைய வாழ்க்கையில் புதிய திருப்பம் ஏற்பட்டதை அறிந்தார். ஸ்வாமியை தரிசித்தபிறகு திருப்பதியில் வெளியில் லட்டு விற்றுக் கொண்டிருந்த ஒரு பையனை, அவன் லட்டு அதிகமாக சாப்பிடுவதைப் பார்த்து தெய்வ அம்சம் என்பதை நினைத்து உணராமல் லட்டு விற்பவனாகமட்டும் நினைத்து அவனை மிகவும் கண்டித்தார். அந்தப் பையன் தீர்த்தரிடம் சிறிய லட்டு பிராசாதத்தைக் கொடுத்து சாப்பிடச் சொன்னான். சாப்பிட்டு மிகவும் கடுமை யான வயிற்றுவலிக்கு உள்ளாகி தீர்த்தர் பிறகு தன் நினைவு இல்லாமல் தூங்கும் பொழுது இரவில் சொப்பனத்தில் ஏழுமலை யான் தோன்றி, உன்னுடைய வயிற்றுவலி நிவாரணம் ஆவதற்கு ஒரே வழி 'தெற்கு நோக்கிச்செல்.' அங்கு என்னுடைய அம்சம் உள்ள கோவில் இருக்கிறது, அங்கு சென்று பிரார்த்தித்தால் வலி உடன் நீங்கும் என்று சொல்லி மறைந்தார். அவர் கட்டளைப்படி தமிழ் நாட்டில் உள்ள பல புனித ஸ்தலங்க ளான கோவிந்தபுரம், திருவீசநல்லூர், குணசேகரம் போன்ற இடங்களுக்கெல்லாம் சென்று கோவில் களைப் பார்த்து துடிக்கும் வயிற்று வலியுடன் தஞ்சை ஜில்லாவில் காவிரி நதியின் உப நதியான குடமுருட்டி ஆற்றில் கரையோரமான நடுக்காவேரி என்ற கிராமத்தை அடைந்து அங்கு உள்ள பிள்ளையார் கோவிலில் தங்கினார். அன்று அங்கு இரவு அவர் நித்திரை செய்யும் சமயம் அசரீரீ வாயிலாக 'நீ மறுநாள் காலையில் முதலில் எதைப் பார்க்கிறாயோ அதைப் பின் தொடர்ந்து செல்லவும்' என்று யானை முகன் கூறி மறைந்தார். அதே போல மறுநாள் அதிகாலையில் இரண்டு வராகங் களை முதலில் பார்த்த தீர்த்தர் வராகங் களைத் தொடர்ந்து நடுக்காவேரியிலிருந்து மேற்கு நோக்கிச் சென்றார். இன்றும் நடுக்காவேரியில் உள்ள அந்தப் பிள்ளை யார் கோவிலில் பிள்ளையாரின் விரல்கள் மேற்கு நோக்கியிருக்கும். அந்த வராஹங்கள் மேற்குப் பக்கத்தில் உள்ள பூபதிராஜபுரம் என்ற கிராமத்தில் உள் நுழைந்து அங்குள்ள

கால்வாயை நீந்திக் கடந்து அக்ரஹாரத்தில் உள்ள வெங்கட்ரமண ஸ்வாமி கோவிலின் முன்பு சிறிது நேரம் நின்று திடீரென்று மறைந்தது. தீர்த்தரும் பிறகு கோவிலுக்குள் நுழைந்து ஸ்வாமியை நமஸ்கரித்து பிரார்த்தித்தார். உடன் வயிற்று வலி நீங்கியது. அதைத் தொடர்ந்து பாகவத தசமஸ்கந்தத்தின் சாரத்தை 'ஸ்ரீகிருஷ்ண லீலா தரங்கிணி' மூலம் 12-காண்டங்களில் இயற்றி பல சீடர்களுக்கு பயிற்றுவித்து ந்ருத்யாசார்யராகவும் ஸ்வாமிக்கு முன் ஆடியிருக்கிறார். இதை குறிப்பிடும் வகையில் இன்றும் கிருஷ்ணா அஷ்டமி அன்று 'உறியடி உற்சவம்' வரகூரில் சிறப்பாக நடக்கிறது. ஸ்ரீ நாராயணதீர்த்தர் ஜெயதேவரின் அம்சமாக கருதப்படுகிறார். இருவரும் ராதாமாதவ சித்தாந்தத்தை அடிப்படை தத்துவமாகக் கொண்டாலும் ஜெயதேவரின் வழி, மதுர பக்தியுடன் கூடிய பூரண ஸ்ருங்கார ரசகாவியமாக இருக்கிறது. ஆனால் ஸ்ரீ நாராயண தீர்த்தர் பாகவதத்தில் கூறியபடி அத்வைத சித்தாந்தத்தில் ஊறி பக்தி காவ்யமாக அமைத்திருக்கிறார். தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களிலும் ஸ்ருங்கார ரசத்தை மிகவும் லாகவமாக கையாண்டுயிருக்கிறார். அவர் இயற்றிய ஒவ்வொரு தரங்கங்களிலும் தன்னை குருபக்த சிவநாராயண தீர்த்தர், சிவநாராயணநந்த தீர்த்தர், தீரசிவ நாராயணாநந்த தீர்த்தர், சிவநாராயணா நந்த தீர்த்தர் என்ற முத்திரைகள் வைத்து பாடியிருக்கிறார். அதில் சில உதாரணங்களைக் குறிப்பிடுகிறேன்.

12-தரங்கங்களிலும் கிருஷ்ணன் பிறந்தது முதல், ருக்மணி கல்யாணம் வரை கீழ்க்கண்ட பிராசீன ராகங்களான நாத நாமக்ரியா, சௌராஷ்டிரம், மத்யமாவதி, காம்போதி, முகாரி, கேதாரகௌளை, சங்கராபரணம், பைரவி, ஆனந்தபைரவி, ரேவகுப்தி, மோஹனம் ஆகிய ராகங்களில் அவர் தன் விருப்பப்படி அமைத்திருக்கிறார். அவருடைய 3-வது தரங்கத்தில் நர்த்தனத்திற்கு வேண்டிய சொல்லுக்கட்டுடன் 'பால கோபால மாமுத்தர கிருஷ்ணா' அமைந்துள்ளது. நாராயண தீர்த்தரும் அவர் சிஷ்ய பரம்பரையில் வந்த ஸ்ரீதியாகராஜரும் பல ரக்தி ராகங்களையும் கையாண்டிருக்கின்றனர்.

கீழ்க்கண்ட தரங்கங்களில் அவருடைய சில விசேஷ அனுபவங்கள் ப்ரதிபலிக்கின்றன.

(i) 'வராஹபுரி' வெங்கடேசப் பெருமானை பாடும் 'ஜெயஜெய ரமாநாத' என்பது முதல் தரங்கம் (வரகூரைப் பற்றி).

(ii) திருப்பதியில் கோயில் கொண்டிருக்கும் ஏழுமலையான் ஸ்ரீ வெங்கடேச க்ஷேத்ரத்தை குறிக்கும் 'ஜெயஜெய ஸ்ரீநிவாச' என்ற மற்றெரு முதல் தரங்கம்.

(iii) திருப்பதியில் லட்டு சாப்பிட்டு விட்டு தீராத வயிற்றுவலி ஏற்பட்டு வரகூரில் 'ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணியை' அர்ப்பணித்து வயிற்றுவலி நீங்கியபின் 12-வது தரங்கத்தில் "காங்க்ஷேதவ பிராசதம்" என்று பாடுகிறார்.

(iv) கோபிகள் கிருஷ்ணன் சுற்றி ஆடியும், பாடியும் தங்களுடைய சந்தோஷத்தையும் குதூகலத்தையும் காண்பித்த பொழுது 'ஏஹிமுதம் தேஹி ஸ்ரீ கிருஷ்ணா கிருஷ்ணா' என்ற 3-வது தரங்கத்தில் பாடியிருக்கிறார்.

(v) கிருஷ்ணனின் பாலலீலைகள் பிரும்மாவிற்கு ஆச்சர்யத்தை உண்டாக்கியது. அவர் சக்தியை சோதனை செய்யும் வகையில் மாடுகளையும், கன்றுகளையும் 'பிரும்மா' மறைத்து வைத்தார்.

கிருஷ்ணனோ அவருடைய மாயா சக்தியால் மாடுகளையும் கன்று களையும் சிருஷ்டித்தார். பிரும்மா, தன் தவறை உணர்ந்து தன்னை மன்னிக்கும் படி கோரி கிருஷ்ணனை நோக்கி பாடினார். இதை 'ஜெயஜெய கோகுல பாலா' என்ற 3-வது தரங்கத்தில் அமைத்துள்ளார்.

(vi) தன்குரு 'சிவராமாநந்த தீர்த்தரை' 'தேவதேவம் க்வேதி' என்ற 7-வது தரங்கத்தில் 'சிவராமதீர்த்த பதாம்புஜ ப்ரமரேண' என்று அவரது திருவடித் தாமரைகளில் நமஸ்கரித்தும் புகழ்ந்தும் பாடுகிறார்.

(vii) நாராயண தீர்த்தர் கிருஷ்ண அனுபவத் தில் ராசலீலை சாதாரண காமுக வியாபாரம் இல்லையென்றும், கிருஷ் ணன் கோபிகளுக்கு போதிப்பது பகவா னின் 'அத்வைத தத்துவம்' என்றும் 'கதயகதய மாதவம்' என்ற 8-வது தரங்கத்தில் பாடுகிறார்.

(viii) நீலநிற பட்டை உடுத்தி இருக்கும் பலராமனின் தம்பியான 'ஸ்ரீகிருஷ்ண பகவானை' ருக்மிணி சமேதராக பார்க் கிறேன் என்று 'ஆலோகயே ருக்மிணி' என்ற 12-வது தரங்கத்தில் பாடுகிறார்.

(ix) கடைசியாக 'ஜெயமங்களம்' என்ற 12-வது தரங்கத்தில் வெண்ணை திருடும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஸர்வமங்களமும் உண்டாகட்டும் என்று கூறி 'ஸ்ரீ கிருஷ்ண லீலா தரங்கிணியை' மஹான் ஸ்ரீ நாராயண தீர்த்தர் இனிது முடிக் கிறார். கடைசி நான்கு ஆண்டுகள் வரகூரிலிருந்து திருப்பூந்துருத்தியை வந்து அடைந்து அழியா மாமரத்தின் அடியில் நிஷ்டையிலிருந்து மாசி மாதம் சுக்ல அஷ்டமியில் 'ஜீவசமாதி' அடைந்தார் என்பது சான்று.

இக்கட்டுரையை முடிக்குமுன் பெரியவர்களாகிய Dr. V. ராகவன், திரு B. நடராஜன் அவர்களுக்கு நன்றி கலந்த நமஸ்காரத்தை தெரிவிக்கிறேன். திரு நடராஜன் அவர்களின் விரிவுரையுடன் கூடிய 'ஸ்ரீ கிருஷ்ணலீலாதரங்கிணி' புத்தகங்களின் இரண்டு பாகமும் எனக்கு பெரும் உதவி அளித்தது என்பதை குறிப்பிடுகிறேன்.

ஸ்ரீ நாராயணதீர்த்தர் ஆராதனை மஹோத்ஸவ கமிட்டியும் சென்னை ஸ்ரீ நாராயண தீர்த்தர் அறக்கட்டளையும் ஒவ்வொரு ஆண்டும் விசேஷமாக, அபிஷேக ஆராதனையை திருப்பூந்துருத்தியிலும், ஜெயந்தி விழாவை சென்னையிலும் நல்லமுறையில் நடத்தி வருகிறார்கள்.

வாழ்க நாமசங்கீர்த்தனம் !

ராதே கிருஷ்ணா ! ராதே கிருஷ்ணா ! !
ராதே கிருஷ்ணா ! !